# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 68 — 1973 ජූලි 13 වැනි සිකුරාදා — 1973.07.13

68 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு யூலை மாதம் 13 ம் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. . | 689 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 696 | ஏலவிற்பனைகள் .. . | 697 |
| ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. | 697 |


# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

*நீர்கொழும்புச் சிறைச்சாலைக் கைத்தொழில் பகுதிக்கு 1973 ம் நிதி ஆண்டுக்கான மூலப்பொருள்கள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள்*

கீழே கைச்சாத்திடப்பட்டிருப்பவராகிய நான் நீர்கொழும்புச் சிறைச்சாலை கைத்தொழில் பகுதிக்கு 1.8.1973—31.12.1973 ம் நிதி ஆண்டு வரை கீழே குறிப்பிடப்பட்ட பொருட்களை வழங்குவதற்குரிய கேள்விப்பத்திரங்களை 1973 ம் ஆண்டு யூலை மாதம் 31 ம் தேதி காலை 10.30 மணிவரைக்கும் பெற்றுக்கொள்வேன்.

2. இலங்கை பிரஜைகளிடம் மட்டுமே கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

3. கேள்விப்பத்திரங்களுக்குரிய கேள்விகளும் பிணைப்பணமும் கீழே குறிக்கப்பட்டு இருக்கின்றன.

| | கேள்விப்பத்திரத்திற் குரிய பணம் | பிணைப்பணம் |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| தும்புக்கட்டைக்குரிய தடிகள் | 25.00 | 300.000 |

4. முக்கிய குறிப்புகள்.—நீர்கொழும்புச் சிறைச்சாலையிலே கொடுக்கப்பட வேண்டும்.

(அ) ஈர்க்குத் துடைப்பத்திற்கும், தும்புத் துடைப்பத்திற்கும் வேண்டிய கைப்பிடி வகைகள் டவற்ற, கபெல, அற்றேரிய போன்ற வைரமான மரமுள்ளதாகவும், குறைந்தது 5 அடி நீளமும், குறைந்த சுற்றளவு 3 அங்குலமும், கூடிய சுற்றளவு 4 அங்குலமும், நீர்கொழும்புச் சிறைச்சாலை அதிகாரியின் விருப்பத்திற்குரியதாகவும் கைப்பிடிகள் நேராகவும் இருக்க வேண்டும்.

5. மேலே குறிக்கப்பட்டுள்ள மாதிரிப் பொருளைச் சமர்ப்பிக்கும் போது பொருட்களின் பெயரையும் அவர்களின் விலாசத்தையும் மேல் உறையில் எழுதி கீழே கையொப்பம் இடப்பட்டு இருப்பவரின் காரியாலயத்தில் சமர்ப்பிக்கவும். மாதிரிப் பொருட்கள் அனுப்பப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

6. கீழ்க்காணும் தாபனங்களுக்கு, கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு முற்பணம் கட்டத்தேவையில்லை :

(அ) கூட்டுறவு விற்பனை நிலையம்.

(ஆ) அரசாங்கத்தால் நடாத்தப்படும் மற்றைய நிறுவனங்கள்.

(இ) கிராம அபிவிருத்திச் சபை பணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்ட கிராம முன்னேற்ற சங்கங்கள்.

(ஈ) கூட்டுறவுச் சங்கப் பதிவாளரால் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள்.

7. கேள்விப்பத்திரங்கள் கீழே கையொப்பம் இடப்பட்டவர் இடத்தில் இருந்து தயாரிக்கப்பட்ட பத்திரங்களாகவும் யூலை மாதம் 30 ம் தேதி 2.30 மணிக்கு முன்பு பெற்றுள்ளதாகவும் இருக்க வேண்டும். சிறைச்சாலை ஆணையாளர், கொழும்புக் காரியாலயத்தில் அல்லது ஏதாவது கச்சேரிகளில் கேள்விப்பத்திரத்தில் உள்ள பொருட்களுக்கான பணம் கட்டப்பட்ட பற்றுச்சீட்டு உடையவருக்கு கேள்விப் பத்திரம் வழங்கப்படும்.

8. முத்திரை இடப்பட்ட உறையின் மேல் மூலையின் **தும்புக்** கட்டை தடி வழங்குவதற்கான கேள்விப்பத்திரம் எனக் குறிப்பிட வேண்டும். கேள்விப்பத்திரங்கள் பதிவுத் தபாலில் அல்லது இக்காரியாலயத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் போடப்பட வேண்டும்.

9. கேட்கப்பட்ட விலைமதிப்புக்கள் இலக்கங்கள் மூலமாகவும் எழுத்து மூலமாகவும் எழுதப்பட்ட பின்னர், ஏதாவது மாற்றங்

---

### முக்கிய அறிவித்தல்

**இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.**

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
**அரசாங்க அழுத்தகர்.**

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**கொழும்பு,**
**1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.**

---

கள் அல்லது திருத்தங்கள் செய்யப்பட்டு இருந்து அதில் விண்ணப்பக்காரரின் கையொப்பம் இல்லாவிடின் அக்கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

10. கீழ் குறிப்பிட்ட கந்தோரில் 1973 ம் ஆண்டு யூலை மாதம் 31 ம் திகதி காலை 10.35 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் பிரிக்கப்படும். அத்துடன் கேள்விப்பத்திர சொந்தக்காரரும் அந்நேரத்தில் வருவதற்கு அனுமதி அளிக்கப்படுவர்.

11. குறிக்கப்பட்ட தவணையில் தேவையான பொருட்களை வழங்கத் தவறினால் தாமதிக்கப்பட்ட நாட்களுக்கான நஷ்டஈடு செலுத்தப்பட வேண்டும். இப்படியான சந்தர்ப்பத்தில் நீர்கொழும்புச் சிறைச்சாலை அதிகாரியால் தேவையான பொருட்களை வேறு எவ்விடத்திலாவது வாங்குவதற்குச் செலவாகும் பணம் பொருந்தக்காரரிடம் இருந்து அறவிடப்படும்.

12. தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு, இலங்கைத் தொழிலாளர்களையே அமர்த்த வேண்டும்.

13. ஒப்பந்தம் செய்யப்பட்டு இருக்கும் கால எல்லைக்குள் ஒப்பந்தக்காரர் ஒருவரையோ அல்லது ஏனையோரையோ காரணத்தை வெளிப்படுத்தாமல் நிராகரிப்பதற்கும் முடிவடையச் செய்வதற்கும் நீர்கொழும்புச் சிறைச்சாலை அதிகாரிக்கு உரிமை உண்டு.

14. தேர்ந்தெடுக்கப்படும் எந்தக் கேள்விப்பத்திரக்காரரேனும் அவர்களுடைய கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதென எழுத்து அறிவித்தலின் 10 நாட்களுக்குள் சிறைச்சாலை அதிகாரியுடன் ஒப்பந்தம் செய்யத் தவறிய, அல்லது கட்ட மறுத்தால் அவர்கள் முற்பணமாகக் கட்டிய தொகையை இழந்து விட நேரிடுவதோடு அரசாங்க ஒப்பந்தம் எதனோடும் சம்பந்தமில்லாதவர்களாகக் கருதப்பட்டு தவறிய ஒப்பந்தக்காரர் என்று கருதப்படும் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்பட நேரிடும்.

15. ஏனைய விபரங்கள் அவசியமாயின் கீழே கைச்சாத்திட்டிருப்பவரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

ஆர். டீ. டக்வத்,
நீர்கொழும்பு சிறைச்சாலை அதிகாரி.

நீர்கொழும்புச் சிறைச்சாலை,
25 யூன் 73.

7-418—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

**கமத்தொழிற்றிணைக்களம்**

அரசாங்க கமத்தொழில் பண்ணைகளுக்கு சோடிக்கிடுகுகள் விநியோகித்தல், பாரங்கொடுத்தல், ஆகிய வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன

மேற்கூறப்பட்ட வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 27.07.73 ஆம் திகதி மு. ப. 10.00 மணி வரையும் யாழ்ப்பாணம் கமத்தொழில் (பண்ணை முகாமையும் ஆக்கமும்) கந்தோரில் கமத்தொழில் அலுவலகரினால் ஏற்றுக கொள்ளப்படும்.

பின்வரும் பண்ணைகளுக்கு சோடிகிடுகுகள் விநியோகித்தல், பாரங் கொடுத்தல் :

1. கமத்தொழில் பண்ணை, பரந்தன்...............3,000 கிடுகுகள்.
2. கமத்தொழில் பண்ணை, கிளிநொச்சி.........3,000 கிடுகுகள்.
3. கமத்தொழில் பண்ணை, திருகோணமலை......1,000 கிடுகுகள்.
4. கமத்தொழில் பண்ணை, முருங்கன்...........1,000 கிடுகுகள்.
5. கமத்தொழில் பண்ணை, வவுனியா............2,500 கிடுகுகள்.
6. கமத்தொழில் பண்ணை, திருநெல்வேலி ...... 1250 கிடுகுகள்.

கோரப்படும் சோடிக் கிடுகுகள் அளவுகள் நீளம் 7 அடிக்கு மேலும் பன்னல் அகலம் 12 அங்குலத்திற்கு மேலும் இருத்தல் வேண்டும்.

விநியோகித்தல், பாரங்கொடுத்தல் 10.08.73 ம் திகதியோ அதற்கு முன்னரோ முடிவடைதல் வேண்டும். தேவைப்படும் திகதி ஒவ்வொரு பண்ணை முகாமையாளராலும் அறிவிக்கப்படும். அறவிடும் தொகை 100 சோடிக் கிடுகுகளுக்குக் குறிப்பிட வேண்டும்.

2. மேற்கூறப்பட்ட நிலையங்களிலும் செய்யும் வேலைகள் சேவைகளுக்கு வெவ்வேறான கேள்விப் பத்திரங்கள் தயாரித்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்வி பத்திரங்களுக்கும் ரூபா 25/- வைப்புப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

3. யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) யால் கொடுக்கப்படும் விண்ணப்பப் படிவங்களிலே கேள்விப்பத்திரங்கள் கோருதல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் இரு பிரதிகளில் தயாரித்துக் கையொப்பமிட்டு சீல்போட்ட தபால் உறையுள் வைத்து, கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) கமத்தொழிற் கந்தோர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பாவிட்டால் யாழ்ப்பாணக் கமத்தொழில் கந்தோருக்கு (ப. மு. ஆ.) கேள்விகாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ நேரில் சென்று சீல் வைத்த உறைகளை இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்களடங்கிய தபாலுறையின் இடதுபுற மேல் மூலையில் வேலையின் பெயர்க் குறிப்பு "........................................" (சேவையின் பெயரும் நிலையமும் கொடுக்கப்பட வேண்டும்). ஆகிய வேலைகளுக்கான கேள்விப்பத்திரம், என்று குறிப்பிட வேண்டும். கேள்விப் பத்திரங்களைத் திறந்து பார்த்தபின் அவை கிடைத்தமை பற்றிய உறுதிப்பத்திரங்கள் ஒவ்வொரு கேள்விக்காரருக்கும் அனுப்பப்படும். கேள்விப்பத்திரம் கோரும் முடிவுத் திகதிக்குப் பின்னர் நான்கு நாட்களுக்குள் உறுதிப்பத்திரம் கிடைக்காத கேள்விக்காரர் யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில், கமத்தொழில் அதிகாரியுடன் (ப. மு. ஆ.) தொடர்பு கொள்ள வேண்டும்.

4. ஒவ்வொரு கேள்விப பத்திரத்திற்கும் வைப்புப்பணமாகக் கட்டிப் பெற்றுக் கொண்ட பற்றுச் சட்டைக் கொடுத்து முடிவுத் திகதிக்கு முன்தினம் பகல் 12 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ள முடியும். கேள்விப்பத்திர வைப்புப் பணம் எச்செயலகங்களிலும் அல்லது கமத்தொழில் இலாகா போரதனையில் செலுத்துதல் வேண்டும். வேலை ஒப்பந்தம் கைச்சாத்தானதும் வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் எச்செயலகங்களிலும் அல்லது கமத்தொழில் இலாகா, பேராதனை கேள்விக்காரர் வேலை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் தனது கேள்விப்பத்திர வைப்புப்பணத்தை இழப்பதுடன் தாமத வேலை செய்யும் கொன்தராத்துக்காரர்களின் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்படுவதுடன் இது சம்பந்தமாக எந்தவிதக் கடிதத் தொடர்பையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள மாட்டாது. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பண்ணை முகாமையாளர்களினால் கொடுக்கப்படும் திகதிகளில் வேலைகளை ஆரம்பித்து குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தியாக்கத் தவறின் ஒப்பந்தத்தில் கூறியவாறு நஷ்டஈடு செலுத்துவதற்கு ஆளாவார்.

5. கேள்விப்பத்திரகாரர் விரும்பின் கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் பிரசன்னமாகலாம். யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில் (ப. மு. ஆ.) கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். திறக்கப்படும் நேரமும் திகதியும் கேள்விப்பத்திர முடிவுத் திகதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

6. அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் (இரு பிரதிகளில்) அல்லது அதில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையாத விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கேள்வித் தொகையும் மொத்தமும் மையினால் தெளிவாக எழுதப்பட வேண்டும். கேள்விப்பத்திரங்களில் அழித்து எழுதுதலும் பிழை திருத்தங்களும் கேள்விப்பத்திரக்காரரால் முதலெழுத்துக் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரக்காரர் தமது பூரணமான பெயர், முகவரி ஆகியவற்றை பெரிய எழுத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதுடன் கேள்விப்பத்திரத்தின் மொத்தத் தொகையின் 5 வீதத்தை பிணைப்பணமாகக் கமத்தொழில் அதிபரிடம் செலுத்துதல் வேண்டும். இப்பணம் கொந்தராத்து வேலையைச் சரிவரச் செய்து முடித்த பின்னரே திருப்பித்தர முடியும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் வேலையைச் சரிவரச் செய்து முடிக்காவிடின் அவருடைய பிணைப்பணம் அரசாங்கத்தைச் சேருவதுடன் அவருடைய பெயர் கொந்தராத்துக்காரர்களின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு தாமத வேலை செய்யும் கொன்தராத்துக்காரர் பட்டியலில் சேர்க்கப்படும்.

9. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் பொழுது ஒப்பந்தப் பத்திரத்தில் ஒட்டப்படும் முத்திரைக்கான செலவைக் கேள்விப்பத்திரக்காரர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

10. கொந்தராத்துக்காரர் தமது வேலையைத் திருப்திகரமாகச் செய்யாமலோ குறிப்பிட்ட தினத்திற்குள் பூர்த்தியாக்காமல் இருந்தாலோ அவரது கொந்தராத்தை முடிவுறச் செய்யும் அதிகாரம் கமத்தொழில் அதிபருக்குண்டு. இப்படியான சந்தர்ப்பத்தில் கொந்தராத்துக்காரரின் செலவில் அவ்வேலையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வேறுவித ஒழுங்குகள் செய்வதற்கு கமத்தொழில் அதிபர் உரிமையுடையவராவார்.

11. கொந்தராத்துக்காரர் கோரும் கேள்விகள் முழுதையுமோ சில பகுதிகளையோ அனுமதிக்கவும் நிராகரிக்கவும் அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

12. கேள்விப்பத்திரக்காரர் கேள்விகள் முடிவு திகதியில் இருந்து மூன்று கிழமையை கேள்விப்பத்திரங்கள் பலசிலனை செய்து ஏற்றுக் கொள்ளும் தினமாக வைத்திருத்தல் வேண்டும்.

13. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் பயிற்றப்பட்ட பயிற்றப்படாத இலங்கையரையே வேலைக்கமர்த்துதல் வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களில் இருந்தே கூலியாட்களை வேலைக்கமர்த்துதல் வேண்டும்.

இந்நிபந்தனைகளுள் ஏதாவது ஒன்றுக்கு அமையாது வேலை செய்யும் கேள்விப்பத்திரக்காரர் கொந்தராத்து வேலை நிராகரிக்கப்படுவதற்கு ஆளாவார். விசேட சூழ்நிலையில் கமத்தொழில் உணவுற்பத்தி மந்திரியின் எழுத்துமூல அங்கீகாரத்தைப் பெற்றிருந்தால் மாத்திரமே இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்த முடியும்.

எழுத்து மூலம் அங்கீகாரம் பெறுது இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்துவது அவரது கொந்தராத்து வேலையை இழப்பதற்கு வழிகோலும்.

" இலங்கையர் " என்னும் பதம் இலங்கையின் வம்சாவழியினரை அல்லது பதிவு செய்யப்பட்ட ஒருவரைக் குறிக்கும்.

அமைய ஊழியர்களின் தற்போதைய அல்லது வருங்காலத்தில் செய்யப்படும் சம்பளசட்ட திட்டங்களுக்கமைய இக்கொந்தராத்தில் வேலைபார்க்கும் கூலியாட்களின் சம்பளங்கள் நிர்ணயிக்கப்படல் வேண்டும். கமத்தொழில் அதிபரினுல் அங்கீகரிக்கப்பட்ட கமத்தொழில் இலாகாவில் வேலைபார்க்கும் ஓர் உத்தியோகத்தர் கொந்தராத்துக்காரரின் வேலை சம்பந்தமான புத்தகங்கள், சம்பளப் பட்டியல், வரவுப் பட்டியல் ஆகிய தஸ்தாவேஜுகளைப் பார்வையிடுவதற்குக் கோரப்படுவர்.

14. எல்லா அறிவித்தல்களும் கேள்விப்பத்திரக்காரருக்கு நேரடியாக, அல்லது தபால்மூலம் அனுப்பப்பட்டால் அது அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

15. 1934 ம் ஆண்டு தொழிலாளர் நலவுரிமைச் சட்ட இல. 19 (பகுதி 117) இன்கீழ் தொழிலாளரினுல் செய்யப்படும் அரசாங்கத்தைப் பாதிக்கும் முறைப்பாடுகளுக்கு கொந்தராத்துக்காரரே பொறுப்புடையவராவார்.

16. விரும்பத்தகாதவரை வேலைக்கமர்த்துவதை எதிர்ப்பதற்கு அரசாங்கத்துக்கு உரிமையுண்டு.

17. குற்றப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் தனித்தோ அல்லது கூட்டாகவோ கேள்விப்பத்திரங்கள் கோரின் அவர்களுடன் கமத்தொழில் அதிபர் விரும்பாவிடின் ஒப்பந்தம் செய்து கொள்ள மாட்டார்கள்.

18. மேலும் விவரங்கள் தேவைப்படின் ஒவ்வொரு பண்ணைகளுக்குமுரிய அதிபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எச். இ. நாணயக்காரு,
பிரதிக் கமத்தொழில் அத்தியட்சகர் (க. க. வும். ப)

பேராதனை.

7–262—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

### நீர்ப்பாசன, மின்சக்தி, நெடுஞ்சாலைகள் அமைச்சு

ஆள்புல பிராந்திய பொறியியல் அமைப்பு—கிழக்குப்பிராந்தியம்

கிழக்கு மாகாணத்துள் அடங்கும் இங்கினியாகலை, அம்பாறை, கல்முனை, உன்னிச்சை, மட்டக்களப்பு, செங்கலடி, மகா ஓயா, மூதூர், கந்தளாய், திருகோணமலை, கோமரங்கடவலை ஆகிய நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவுகட்கு பொருட்களை கொண்டு செல்லும் வாகனங்களையும், மண்வேலை செய்வதற்கான இயந்திரங்களையும் வாடகைக்கு விடுவதற்கான கேள்விப்பத்திரங்களை கிழக்குப் பிராந்தியத்திற்கென மட்டக்களப்பிலுள்ள வேலைகள் பணிப்பாளரின் காரியாலயத்தின் கேள்விப்பத்திர சபைத் தலைவர் 28.7.73 ந் திகதி காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்வார்.

(2) ஒவ்வொரு பிரிவுக்குமான கேள்விப்பத்திரங்கள், மட்டக்களப்பு, கிழக்குப் பிராந்திய வேலைகள் பணிப்பாளர் காரியாலயத்திலிருந்து பெறக்கூடிய படிவங்கள் இரண்டில் தயாரிக்கப்பட வேண்டும். இக்காரியாலயத்திலிருந்து தேவையான இதற்குரிய மேலதிக விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

(3) கேள்விப்பத்திர வைப்புப்பணமாக ஒவ்வொரு பிரிவுக்கும் ரூபா 25/- ஐ செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்தால் கேள்விப்பத்திர படிவங்களும், குறிப்பிட்ட வேலைபற்றிய நிபந்தனைகளின் விபரமும், விசேட நிபந்தனைகளின் விபரமும் 26.7.1973 ம் திகதி நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும். எனினும் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிப்பார்கள் என எதிர்பார்க்கப்படும் கேள்விப்பத்திரக்காரர்கள் ரூபா 2/- ஐ மேலதிகமாக செலுத்தி குறிக்கப்பட்ட வேலைபற்றிய நிபந்தனைகளின் விபரமும் விசேட நிபந்தனைகளின் விபரமும் பெற்றுக் கொள்ளலாம்.

(4) கேள்விப்பத்திர வைப்புப்பணத்தை எந்த ஒரு கச்சேரியிலோ அல்லது மட்டக்களப்பு கிழக்குப் பிராந்திய வேலைகள் பணிப்பாளர் காரியாலயத்திலோ செலுத்தலாம்.

என். ஜி. தாமோதரம்,
வேலைகள் பணிப்பாளர்,
(கிழக்குப் பிராந்தியம்)

வேலைகள் பணிப்பாளர் மணிமனை,
கிழக்குப் பிராந்தியம்,
மட்டக்களப்பு,
25.6.73

7-416—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

### காணி அபிவிருத்தித் திணைக்களம்

பதவியாக் குடியேற்றத்திட்டத்தில் குடியேற்றவாசிகளுக்கு வீடுகள் நிருமாணிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள்

பதவியாக் குடியேற்றத்திட்டத்தில் கீழ்க்காணும் வீடுகளைக் கட்டுவதற்கான கேள்விப்பத்திரங்களைக் காணி அபிவிருத்தி அதிபர் 1973.08.03 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிவரை ஏற்றுக்கொள்வார்.

1. குடியேற்றவாசிக்கான வீடுகள்—எண்ணிக்கை 100—கட்ட செங்கற்களாலும், களிமண் கலவையாலும் நிருமாணிக்கப்பட வேண்டும்.

2. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 250 கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் கணக்கில் வரவு வைக்கும்பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்)யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள எதாவதொரு கச்சேரியிலோ செலுத்தி 1973.06.02 திகதி நண்பகல் 12.00 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு-1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இருபிரதிகளில் கேள்விக் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

3. கேள்விக்காரர்கள் பணம் கட்டியதற்குரிய பற்றுச் சீட்டைப் பத்திரமாக வைத்திருந்து பணத்தை மீளப்பெற விண்ணப்பிக்கும்போது சமர்ப்பிக்க வேண்டும். இவைகளைச் கேள்விப் பத்திரங்களுடன் இணைக்கக்கூடாது.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப்பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப் பணத்தை மீளப்பெறவேண்டுமாயின், கேள்விப்பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையு முன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் " பதவியாக் குடியேற்றத் திட்டத்தில் குடியேற்றவாசிகளுக்கான வீடுகள் நிருமாணிப்பதற்கான கேள்விப்பத்திரம் " எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1, என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடது பக்கக்கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத்தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலம் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தி திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும், மாற்றமுடியாதவையுமாகும். கேள்விப் பத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் மீளப்பெற்றுக் கொள்ளக்கூடாது.

7. கேள்விகளை ஏற்றுக் கொண்ட திகதியிலிருந்து ஆறு (6) மாதங்களுக்குள் கேள்விக்காரர் வேலையை முடிக்க வேண்டும்.

8. தேர்வுபெற்ற கேள்விக்காரர் கேட்டுக்கொள்ளப்படுமிடத்து பிணைப்பணம் செலுத்தவும், ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும் தவறுமிடத்து அவருடைய வைப்புப்பணம் பறி முதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெறமுடியாது தவறிய ஒப்பந்தக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1973-08-03 திகதி முற்பகல் 11.30 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமூகமளிக்கலாம்.

10. கேள்விக்காரர் குறைந்தது 50,000 ரூபாவுக்கு பொது வேலைத் திணைக்களம்/நீர்ப்பாசன/கல்வி அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களம் முதலியவற்றில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களாக இருக்க வேண்டும். பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் போது பதிவு செய்யப்பட்டதை நிரூபிக்க வேண்டும்.

11. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பயிற்றப்பட்ட பயிற்றப்படாத இலங்கையரையே வேலை ஒப்பந்தத்தின் கீழ் வேலைக்கமர்த்த வேண்டும். கூடியவரை வேலைநடைபெறும் பிரதேசங்களிலிருந்தே கூலியாட்களை வேலைக்கமர்த்தல் வேண்டும்.

12. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

13. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் மேற்பார்வைப் பொறியியலாளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1, 30.06.1973.
சிசி/1/482

7-336—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

**காணி அபிவிருத்தித் திணைக்களம்**

## அனுராதபுர மாவட்டத்திலுள்ள மகாகணதருவை குடியேற்றத்தில் குடியேற்ற வாசிகளுக்கு வீடுகள் நிருமானிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள்

மகாகணதருவை குடியேற்றத்திட்டத்தில் கீழ்காணும் வீடுகளை நிருமானிப்பதற்கான கேள்விப்பத்திரங்களைக் காணி அபிவிருத்தி அதிபர் 1973-08-03 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிவரை ஏற்றுக் கொள்ளுவார்.

1. குடியேற்றவாசிகளுக்கான வீடுகள்—எண்ணிக்கை 100 சுட்ட செங்கற்களாலும் களிமண் கலவையாலும் நிருமாணிக்கப்பட வேண்டும்.

2. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 250 கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் கணக்கில் வரவு வைக்கும்பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்)யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவதொரு கச்சேரியிலோ செலுத்தி 1973-08-02 திகதி நண்பகல் 12.00 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு-1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவர்களிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இருபிரதிகளில் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

3. கேள்விக்காரர்கள் பணம் கட்டியதற்குரிய பற்றுச் சீட்டைப் பத்திரமாக வைத்திருந்து பணத்தை மீளப்பெற விண்ணப்பிக்கும் போது சமர்ப்பிக்க வேண்டும். இவைகளைச் கேள்விப் பத்திரங்களுடன் இணைக்கக்கூடாது.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப்பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப் பணத்தை மீளப்பெறவேண்டுமாயின், கேள்விப்பத்திரங்களை அறுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையு முன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் "மகாகணதருவை குடியேற்றத்தில் குடியேற்றவாசிகளுக்கு வீடுகள் நிருமாணிப்பதற்கான கேள்விப்பத்திரம்" எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1, என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்கக் கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத்தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலம் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப் பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும், மாற்றமுடியாதவையுமாகும். கேள்விப் பத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் மீளப் பெற்றுக் கொள்ளக்கூடாது.

7. கேள்விகளை ஏற்றுக் கொண்ட திகதியிலிருந்து ஆறு (6) மாதங்களுக்குள் கேள்விக்காரர் வேலையை முடிக்க வேண்டும்.

8. தேர்வுபெற்ற கேள்விக்காரர் கேட்டுக்கொள்ளப்படுமிடத்து பிணைப்பணம் செலுத்தவும், ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும் தவறுமிடத்து அவருடைய வைப்புப்பணம் பறி முதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெறமுடியாது தவறிய ஒப்பந்தக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1973.08.03 திகதி முற்பகல் 11.00 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

10. கேள்விக்காரர் குறைந்தது 50,000 ரூபாவுக்கு பொது வேலைத் திணைக்களம்/நீர்ப்பாசன/கல்வி அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களம் முதலியவற்றில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களாக இருக்க வேண்டும். பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் போது பதிவு செய்யப்பட்டதை நிரூபிக்க வேண்டும்.

11. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பயிற்றப்பட்ட, பயிற்றப்படாத இலங்கையரையே வேலை ஒப்பந்தத்தின் கீழ் வேலைக்கமர்த்த வேண்டும். கூடியவரை வேலைநடைபெறும் பிரதேசங்களிலிருந்தே கூலியாட்களை வேலைக்கமர்த்தல் வேண்டும்.

12. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

13. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் மேற்பார்வைப் பொறியியலாளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1, 30-06-73.
சிசி/1/481

7-333—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

அரசாங்க அதிபரின் இல. எல்எஸ்/100

**காணி ஆணையாளர் திணைக்களம்**

பின்வரும் வேலைகளைச் செய்வதற்கான கேள்விப்பத்திரங்களை தபால் பெட்டி, இல. 500, கொழும்பு என்னும் முகவரியிலுள்ள காணி ஆணையாளர் திணைக்களத்தைச் சேர்ந்த கேள்விப்பத்திரச் சபைத் தலைவர் அவர்கள் 1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ந் திகதி பிற்பகல் 2.30 மணி வரை ஏற்றுக்கொள்வார்.

| வேலையின் விபரம் | தேவைப்படும் பதிவுத் தொகை |
| --- | --- |
| 1. பரந்தன்-முல்லைத்தீவு றோட்டிலிருந்து பீக்குளம் றோட்டுத் திருத்த வேலை. (நீளம் 2 மைல்) | ரூபா 50,000 |
| 2. பாவற்குளம் 1 ஆம் படிவ றோட்டுத் திருத்த வேலை (நீளம் 2 மைல்) | ரூபா 50,000 |

2. மேற்கூறிய தொகைக்கோ அல்லது அதில் கூடிய தொகைக்கோ அரசினர் பிரதேச குடியார் பொறியியல் ஸ்தாபனம் அல்லது கல்வி முதலிய திணைக்களங்களில் ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கட்கும், கிராம முன்னேற்றச் சங்கங்கள், தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றிற்கும் இக்கேள்விகட்கான வெற்றுக் கேள்விப்பத்திரங்கள் 1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும்.

3. வெற்றுக் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படுமுன் வவுனியாக் கச்சேரியில் ரூபா 100/- கேள்விக்கட்டணமாகக் கட்டியே, பற்றுச் சீட்டு கேள்விக்காரர்களால் அரசாங்க அதிபருக்கு காண்பிக்கப்படல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் ஆகியன இக்கேள்விக்கட்டணம் செலுத்தத் தேவையில்லை.

4. வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரிடம் பெற்றுக்கொண்ட வெற்றுக் கேள்விப்பத்திரங்களில் (இணைப்பிரதிகள்) பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். இவ்வேலை சம்பந்தமான மேலதிக விபரங்களை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் தபால் மூலம் அனுப்பப்படாவிட்டால், அவற்றை நேரடியாக கொழும்பிலுள்ள செயலகத்தின் 357 ம் இலக்க அறையிலுள்ள 3 ஆம் மாடியில் வைத்திருக்கும் கேள்விப் பத்திரப் பெட்டியில் போடலாம்.

5. கேள்விப்பத்திரங்கள் 1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ந் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு கொழும்பிலுள்ள செயலகத்தின் 357 ஆம் இலக்க அறையில் வைத்துத் திறக்கப்படும்.

6. தவறிழைத்த ஒப்பந்தக்காரர் பட்டியலில் காணப்படும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் இலங்கையரை மட்டுமே வேலைக்கமர்த்த வேண்டும். மேலும் இவர்கள் வேலை நடைபெறும் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாயுமிருத்தல் வேண்டும்.

செ. சிவஞானம்,
அரசாங்க அதிபருக்காக,
வவுனியா மாவட்டம்.

வவுனியாக் கச்சேரி,
22.06.1973.

7-421—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

**அஞ்சல் தொலைத்தொடர்புத் திணைக்களம்**

பி. வி. சி. இரட்டைக் கேபிள்களை வழங்குதல்

கொழும்பு 1, கோட்டை, அஞ்சல் தொலைத்தொடர்புத் தலைமை அலுவலகக் கட்டிடத்தில், நிர்வாகப் பிரிவிலுள்ள, அஞ்சல் தொலைத்தொடர்புத் திணைக்கள கேள்விச் சபைத் தலைவர், பின்வருவனவற்றை வழங்குவதற்கும் ஒப்படைப்பதற்குமான கேள்விகளை 1973 ஆகஸ்ட் 9 ம் திகதி மு. ப. 10.00 மணி வரை ஏற்றுக்கொள்வார்.

(1) 4,00,000 யார் பி. வி. சி. இரட்டைத் தொலை பேசிக் கேபிள் (ஒரு சோடிவகை)

**கொழும்பு 1, கோட்டை, அஞ்சல் தொலைத்தொடர்புத் தலைமை அலுவலகக் கட்டிட 5 ம் மாடியிலுள்ள பிரதான தொலைத்தொடர்புப் பொறியியலாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய படிவங்களில், இரட்டைப் பிரதிகளில் கேள்விப் பத்திரங்களைத் தயாரித்தல் வேண்டும். பி தொ. பொறியியலாளரிடமிருந்து சகல விபரங்களையும் அறியலாம். அவரின் அலுவலகத்தில் கேள்விப் பத்திரச் சாதனங்களையும் பரிசீலனை செய்யலாம்.**

ஓர் அஞ்சல் அலுவலகத்தின் அதிபருடன் அல்லது கொழும்பு 1, கோட்டை. ம. த. அ. தந்திக் கணக்காளரிடம் ரூபா 200.00 கேள்விக் கட்டுப்பணமாகக் கட்டி, அதன் பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்து விண்ணப்பிப்பவர்களுக்கு 1973 ஆகஸ்ட் 2 ம் திகதி பி. ப. 12.00 மணிவரை பிரதான தொலைத்தொடர்புப் பொறியியலாளரின் அலுவலகத்தில் கேள்விப்பத்திரச் சாதனங்கள் வழங்கப்படும்.

ஏ. ஆ. ஈ. எம். ஜயவர்த்தன,
அஞ்சல் அதிபர் நாயகமும் தொலைத்தொடர்புப் பணிப்பாளரும்.

**நிருவாகப் பகுதி,
6 வது மாடி,
அ. தொ. தலைமையகம்,
லோற்றஸ் வீதி,
கோட்டை,
கொழும்பு 1,
மே 2, 1973.**

**7-415—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68**

---

**சிறு கைத்தொழிற்றிணைக்களம்**

மின்தறிப் பாகங்கள் வழங்குவதற்காகான கேள்விகளை உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து 1973.08.02 காலை 10 மணி வரை கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களக் கேள்விச் சபைத் தலைவர் ஏற்றுக்கொள்வார்.

2. முழு விபரங்கட்கும் கேள்வி நிபந்தனைகட்கும் தயவு செய்து சிறு கைத்தொழிற் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்கவும்.

சோமபால குணதீர,
சிறு கைத்தொழிற் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் : 3/1—(3/15)
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.07.03.

**7-354—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68**

---

**சிறு கைத்தொழிற்றிணைக்களம்**

கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களக் கேள்விச் சபைத் தலைவர் 1973.08.01 காலை 10 மணி வரை, இயந்திரப் பாகங்கள் (கையிருப்பிலிருந்து) வழங்குவதற்கான கேள்விகளை ஏற்றுக்கொள்வார்.

2. மேலதிக விபரங்கட்கும் கேள்வி நிபந்தனைகட்குந் தயவு செய்து சிறு கைத்தொழிற் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்கவும்.

சோமபால குணதீர,
சிறு கைத்தொழிற் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் : 3/1—(3/37)
சிறுகைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.07.03.

**7-355—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68**

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

கேள்விப்பத்திர அறிவித்தல்

கொழும்பு-5, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், மரம் வழங்குவதற்காக 1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08 ஆம் தேதி மு.ப. 10.00 மணிவரை, பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

குறித்த முடிவுத் தேதிக்கு முந்திய நாள் நண்பகல் 12.00 மணிவரை எனது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் செய்யப்படவேண்டும். இப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளுவதற்கு ஒரு தொகுதி கேள்விப்பத்திரப் படிவங்களுக்கு மீளளிக்கப்படமாட்டாத கேள்விப் பத்திரக் கட்டணமாக 10 ரூபாவை காசாகக் கட்டவேண்டும். கேள்வி சம்பந்தமான கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக 100 ரூபாவைக் காசாக, பொரலஸ்கமுவ வெரகெரையிலுள்ள இ.போ.ச. பிரதிப் பிரதம கணக்காள உத்தியோகத்திரிடம் கட்டி, அவ்விதம் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கேள்விப் படிவங்கள் வழங்குவதற்காக எனது அலுவலகத்தில் காட்டவேண்டும்.

மேலதிக விவரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பிரதம வினியோக உத்தியோகத்தர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

வினியோகப் பகுதி,
வெரகெரை,
பொரலஸ்கமுவை.
26 யூன், 1973.

4-409—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

பதவியா திட்டத்தில் இயந்திரங்களை உபயோகித்துக் காடு துப்பரவு செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள்

குறிக்கப்பட்டுள்ள பின்வரும் பிரதேசங்களில் இயந்திரங்களை உபயோகித்துக் காடு துப்பரவு செய்வதற்கான கேள்விப்பத்திரங்களை 27.07.1973 முற்பகல் 11.00 மணிவரை காணி அபிவிருத்தி அதிபர் ஏற்றுக்கொள்ளுவார். இவ்வாறு துப்பரவு செய்தலில் களைதல், கட்டை பிடுங்கள், எரித்தல், மட்டமாக்குதல், வரம்பிடல் விரயமானவைகளை ஒதுக்குதல் முதலியன அடங்கும்.

| மாவட்டம் | திட்டம் | சரியான | அளவு |
|---|---|---|---|
| அனுராதபுரம் | பதவியா | 946 | ஏக்கர் |

2. சம்பந்தப்பட்ட மாவட்டத்தில் மாவட்ட அரசாங்க அதிபரின் பிரதிநிதியால் அல்லது கச்சேரி நில அளவையாளரால் துப்பரவு செய்யவேண்டிய துண்டுகளின் எல்லைகள் சுட்டிக்காட்டப்பட்டு அது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். மாதிரிப்படத்திலும் நிலத்திலும் இத்துண்டுகளின் எல்லைகள் ஒருதரம் குறிக்கப்பட்டால் இவ்வெல்லைகளுக்குள் எல்லா வேலைகளும் செய்யப்படவேண்டும். இவ்வெல்லைகளுக்கு உட்பட்ட பிரதேசத்திற்கான வேலைகளுக்கு கொடுப்பனவு செய்யப்படும்.

3. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 200 கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1 ஆம் இலக்கக் கணக்கில் வரவு வைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்பிற்கு வெளியிலாயின் எந்தவொரு கச்சேரியிலோ செலுத்தி 26.07.1973 திகதி நண்பகல் 12.00 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இருபிரதிகளில் கேள்விப்பத்திரங்களைத் சமர்ப்பிக்கலாம்.

4. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் " பதவியாத்................................................/திட்டத்தில் இயந்திரங்களை உபயோகித்துக் காடுதுப்பரவு செய்வதற்கான கேள்விப்பத்திரம் " என கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் குறிப்பிட்டு காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1, என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும், முகவரியும் கடித உறையின் இடது பக்கக்கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அஞ்சல் மூலமாயின் பதிவு அஞ்சலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலம் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப் பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

5. கேள்விகள் நிரந்தரமானவையும், மாற்றமுடியாதவையுமாகும். கேள்விப் பத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் மீளப் பெற்றுக்கொள்ளக் கூடாது.

6. கேள்விகளை ஏற்றுக்கொண்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் கேள்விக்காரர் வேலையை முடிக்க வேண்டும்.

7. தேர்வுபெற்ற கேள்விக்காரர் கேட்டுக்கொள்ளப்படுமிடத்து பிணைப்பணம் செலுத்தவும், ஒப்பந்தத்திற் கைச்சாத்திடவும் தவறுமிடத்து அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செயப்படுவதுடன் அவர் அரச வேலை ஒப்பந்தங்களைப் பெறமுடியாது தவறிய ஒப்பந்தத்தகாரர் பட்டியலிற் சேர்க்கப்படுவர்.

8. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 27.07.1973 ஆந் திகதி முற்பகல் 11.30 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமுகம் கொடுக்கலாம்.

9. தெரிவுசெய்யப்பட்ட கேள்விக்காரர் சம்பந்தப்பட்ட பிரிவிலுள்ள மாவட்ட அரசாங்க அதிபரிடமிருந்து பெறக்கூடிய ஒப்பந்தப் படிவத்தைக் கவனமாக வாசிப்பதுடன், தேவையாயின் கச்சேரியிலிருந்து அவசியமான விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

10. அரசாங்கமானது எல்லாக் கேள்விகளையும் அல்லது எந்தக் கேள்வியையும் தள்ளுபடி செய்யுமுரிமையையும் ஒரு கேள்வியின் எந்தப் பகுதியையும் ஏற்கும் உரிமையையும் தனக்கு எவ்வித ஐயப்பாடுமின்றி ஒதுக்கியுள்ளது.

11. தெரிவுசெய்யப்பட்ட கேள்விக்காரர் சம்பந்தப்பட்ட மாவட்ட அரசாங்க அதிபருடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட வேண்டும்.

12. எந்த ஒப்பந்தமும் உரிய அதிகாரமின்றிப் பிறருக்குச் சாட்டுதல் செய்யப்படவோ அல்லது உபவாடகைக்கு விடப்படவோ ஆகாது. ஓர் ஒப்பந்தக்காரர் வேறெவருக்கேனும் தனது சார்பில் ஒப்பந்தத்தை நடாத்துமாறு அதிகாரமளிக்கும் தத்துவ உரிமையை ஏற்றுக்கொள்ள மறுக்கும் உரிமையை அரசாங்கம் தனக்கு ஒதுக்கியுள்ளது.

13. அரசாங்க அதிபர் ஆகியவர் தனக்குப் போதுமானதெனக் காணும் காரணங்களுக்காக, ஒப்பந்தக்காரர் ஒருவர் வேலைக்கமர்த்தும் எவருக்கு மெதிராக மறுப்புத் தெரிவித்து எழுத்துமூல அறிவித்தல் கொடுக்கலாம். அத்தகைய ஒருவரை ஒப்பந்தகாரர் வேலைகமர்த்தலாகாது.

14. முன்னர் அரசுடன் ஒப்பந்தம் செய்திராத ஒரு கேள்வியாளர் கேள்விப்படிவங்களுக்கு விண்ணப்பிக்கும் போது தனது முழுப்பெயர், நிரந்தர விலாசம், தனக்கு எந்தமாவட்டம் அல்லது மாவட்டங்களில் காணிச் சொத்து அல்லது சோந்தை இருக்கின்றது என்பதைக்கூறி ஓர் எழுத்துமூலக் கூற்றைப் படிவங்கள் வழங்கும் உத்தியோகத்தருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். காணியின் பரப்பளவும் பிறசோந்தைகளின் தன்மையும் பரப்பளவும் கொடுக்கப்படல் வேண்டும். வேறு எந்தத் திணைக்களத்துடனும் அரச ஒப்பந்தத்தை நிறைவேற்றியுள்ள கேள்வியாளர் ஒருவர் அத்திணைக்களத்தின் பெயரையும் எந்த மாவட்டத்தில் அச்சேவை செய்யப்பட்டதென்பதையுங் கூறல் வேண்டும்.

15. கேள்விக்காரர் பணங்கட்டியதற்குரிய பற்றுச்சீட்டைப் பத்திரமாக வைத்திருந்து பணத்தை மீளப்பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்கும் போது சமர்ப்பிக்கவேண்டும். இவைகளைக் கேள்விப் பத்திரங்களுடன் இணைக்கக்கூடாது.

16. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப்பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப் பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப் பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையும் முன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

17. மேலதிக தகவல்கள் ஏதாவது வேண்டுமாயின் அவைகளை காணி அபிவிருத்தி அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

உ. ஆ. குணரத்தின,
காணி அபிவிருத்தி அதிபர்.

காணி அபிவிருத்தி திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1.
1973 யூன் 30 ந் உ.
சீரீ/1/479

2-334—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

**காணி அபிவிருத்தித் திணைக்களம்**

*மின்சக்தியால் இயங்கும் நீர்ப்பம்பி ஒன்று வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்*

மின்சக்தியால் இயங்கும் நீர்ப்பம்பி ஒன்று வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்களை 27.07.1973 திகதி முற்பகல் 11 மணிவரை காணி அபிவிருத்தி அதிபர் ஏற்றுக்கொள்வார்.

2. கேள்விக்காரர் பின்வருவனவற்றை வழங்குவதற்காகக் குறிக்கலாம். முன்னைய இருப்பு, கிருலப்பனை மத்திய வேலைத்தலத்தில் விநியோகிக்கப்பட்டவை. கேள்விக்காரர்கள் முந்திய விநியோகக் காலத்தைக் குறிப்பிடலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 25/- கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் கணக்கில் வரவுவைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவது ஒரு கச்சேரியிலோ செலுத்தி, 26.07.1973 தேதி நண்பகல் 12 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டை கொழும்பு 1 காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளில் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப் பணத்தை மீளப்பெற வேண்டுமாயின் கேள்விப்பத்திரங்களை அனுப்புவதற்காக குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையு முன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் "மின்சக்தியால் இயங்கும் ஒரு நீர்ப்பம்பி வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள்" எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்கக் கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத்தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலமும் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும் மாற்றமுடியாதவையுமாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் மீளப் பெற்றுக்கொள்ளக் கூடாது.

7. கேள்விக்காரர்கள் விநியோகம் சம்பந்தமான முழுவிபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்றுக் கொண்ட விபரங்களில் ஏதாவது மாற்றமிருப்பின் அவ்வாறு குறிப்பிட்டுக்காட்ட வேண்டும்.

8. தேர்வுபெற்ற கேள்விக்காரர்கள் விநியோகத்தில் தவறிழைப்பின் அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெறமுடியாது, தவறிய கேள்விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 27.07.1973 ந் திகதி முற்பகல் 11.00 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர்கள் சமுகமளிக்கலாம்.

10. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

11. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் மேற்பார்வைப் பொறியியலாளர் காணி அபிவிருத்தித் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
30.6.1973.
சிஎ/2/428

2-335—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

**புத்தள மாவட்டத்தில் கட்டிடவேலைகளுக்கான**

**கேள்விப்பத்திரங்கள்**

புத்தள மாவட்டத்தில் கீழ்க் குறிக்கப்படும் கட்டிட வேலைக்கான கேள்விப் பத்திரங்கள், புத்தளம் கச்சேரி, கேள்விப்பத்திர சபைத் தலைவரால் 14.07.1972 ம் திகதி மு. ப. 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| வேலையின் விபரம் | காரியாதிகாரி பிரிவு | பதிவுசெய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|
| (1) வீரபாண்டியான–கோகஹயாய ஊடாக தெதுறு ஓயாப் பாதை .. | சிலாபம் .. | 15,000 00 |
| (2) தரியாகம விஹார வீதியின் 2 ம் பகுதி .. .. | சிலாபம் .. | 18,000 00 |
| (3) மரத்தகலே ஹத்தினி குடியேற்றத் திட்டக் குறுக்குப் பாதைகள் .. | நாத்தாண்டிய | 10,000 00 |
| (4) மஹாகோன்வவ திட்டப் பாதை .. | நிக்கவரட்டி .. | 18,000 00 |
| (5) மடவலப்பிற்றி குடியேற்றத்தில் பொதுக் கிணறு அமைத்தல் .. | வென்னப்புவ | 5,000 00 |
| (6) சின்னப்பாடு குடியேற்றத்தில் பொதுக் கிணறு அமைத்தல் .. | புத்தளம் .. | 5,000 00 |
| (7) பனையடிக் குடியேற்றத்தில் பொதுக் கிணறு அமைத்தல் .. | புத்தளம் .. | 5,000 00 |
| (8) வில்பொத்த குடியேற்ற அலுவலரின் இல்லம் திருத்தி அமைத்தல் | ஆராய்ச்சிக்கட்டு | 1,500 00 |
| (9) ஆனைமடு குடியேற்ற அலுவலரின் இல்லம் திருத்தி அமைத்தல் .. | கு.வ.பி .. | 1,500 00 |

2. அரசாங்க அலுவலகங்களில் மேலே கூறப்பட்டிருக்கும் தொகை ரூபாவுக்கும் அல்லது அதற்கு மேலும் பதிவுசெய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களும், தொழிற் சங்கங்களுக்கும், கிராம முன்னேற்றச் சங்கங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கான வெற்றுப் பத்திரங்கள் 02.08.73 ந் திகதி மு. ப. 10.00 மணிவரை புத்தளம் கச்சேரியில் விநியோகிக்கப்படும்.

3. கொந்தராத்துக்காரர்கள், மேற்கூறிய வேலைகளுக்குக் கேள்விப் பத்திர வைப்புப்பணமாக ரூபா 25 வீதம், புத்தளம் கச்சேரியிலோ, வேறெந்த கச்சேரியிலோ அல்லது பொதுக் திறைசேரியிலோ பணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன், மேலே கூறப்பட்ட ரூபா அல்லது அதற்கு மேலான தொகைக்குப் பதிவுசெய்யப்பட்ட கொந்தராத்துக்காரர் என அத்தாட்சிப்படுத்தும் பத்திரங்களை, கேள்விப் பத்திரங்களுக்கான வெற்றுப்பத்திரங்கள் கொடுபடமுன், புத்தள அரசாங்க அதிபரிடம் சமர்பித்தல் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விப்பத்திர வைப்புப்பணம் கட்டத் தேவையில்லை. எப்படியென்றாலும் மேலே கூறப்பட்ட ரூபாவுக்குப் பதிவு செய்யப்பட்ட பத்திரங்களைச் சமர்பித்த பின்னரே கேள்விப் பத்திரங்கள் இவர்களுக்கு வழங்கப்படும். காசோலைகள் தபாற்கட்டளைகள், காசுக்கட்டளைகள் ஆகியன ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

4. புத்தளம் அரசாங்க அதிபரிடம் இருந்து பெறும் பத்திரங்கள் இணைப்பிரதியில் நிரப்பப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்களில் கையொப்பமிட்டு, திகதியிட்டு, முத்திரையிடப்பட்ட கவரில் போட்டு அக்கவரின் இடது பக்க மேல் மூலையில் "...................... கட்டு வேலைக்கான கேள்விப்பத்திரங்கள்" எனக் குறிப்பிடவேண்டும். கேள்விப் பத்திரங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படாவிட்டால், கேள்விப் பத்திரங்களைத் தாமாகவே புத்தளக் கச்சேரியில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில இடவேண்டும்.

5. கேள்விப்பத்திரங்கள் 06.08.1973 ந் திகதி காலை 10.30 மணிக்கு புத்தளக் கச்சேரியில் வைத்துத் திறக்கப்படும். அப்பொழுது கேள்விக் காரர்களோ அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளோ சமுகமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

6. காரணம் காட்டாமல் கேள்விப்பத்திரங்களில், ஏதாவதொன்றையோ அதன் பகுதியொன்றையோ ஏற்றுக்கொள்ளவும், கேள்விப் பத்திரங்களில் ஏதாவதொன்று அல்லது முழுவதையும் நிராகரிக்க கேள்விப்பத்திரச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

7. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர், தமது கேள்விப்பத்திரம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டவுடன் கேள்விக்குரிய தொகை ரூபாவின் நூற்றுக்கு ஐந்து வீதத் தொகையை பாதுகாப்புப் பணமாகக் கட்டவேண்டும். அத்துடன் ஏழு நாட்களுள் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுதல் வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரருக்கு அவர் கொடுத்த விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ, தெரிந்தெடுக்கப் பட்டதை கடித மூலம் அறிவித்தால், கேள்விப்பத்திரக்காரர் ஏற்றுக் கொண்டார் என்று கொள்ளப்படும். கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப் பட்டது பற்றி கடிதம் பெற்ற ஒருவர், ஒப்பந்தம் எழுதத் தவறுவாராயின் அவர் கட்டிய கேள்விப்பத்திர வைப்புப்பணம் அரசாங்கத்துக்குச் சொந்தமாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரக்காரர், கேள்விப் பத்திரத் தொகையின் நூற்றில் ஐந்து பங்கைக் கட்டியவுடன், தேர்ந் தெடுக்கப்படாதோரின் கேள்விப்பத்திர வைப்புப்பணம் திருப்பிக் கொடுக் கப்படும்.

8. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் நியமித்த வேலையை முடிப்பதற்கு இலங்கையரையே வேலைக்கமர்த்தல் வேண்டும். அதுவும் வேலை ஏற்றுக்கொள்ளப்பட்ட பகுதியில் சீவிப்பவரையே தேர்ந்தெடுத் தல் வேண்டும். கூலியாட்களுக்குச் சம்பளம் வழங்குவதற்கென இப் பொழுது பாவிப்பில் உள்ள சட்டங்கள், பின்னும் பாவிப்பிற்கு வரவிருக் கும் சட்டங்களுக்கு இணங்கவே, இவ்வேலையை முடிப்பதற்குத் தாமான வேதனம் வழங்க வேண்டும்.

9. வேறு விபரங்கள் புத்தள அரசாங்க அதிபரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பீ. எஸ். விஜயவீர,
அரசாங்க அதிபர்,
புத்தளம் மாவட்டம்.

புத்தளக் கச்சேரி,

7–252/1—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

### புத்தள மாவட்டத்தில் கட்டிட வேலைகளுக்கான கேள்விப்பத்திரம்

புத்தள மாவட்டத்தில், கீழ்க் குறிப்பிடப்படும் கட்டிட வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள், கொழும்பு, த. பெ. இல. 500, காலிக் கொமி ஷனர் இலாகா கேள்விப்பத்திர மண்டலத்தின் தலைமையாளரால் 1973.08.03 ம் திகதி பி. ப. 2.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| வேலை விபரம் | காரியாதிகாரி பிரிவு | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|
| (1) கமக்காரத் தோட்டம் பாதை | புத்தளம் | 30,000 |
| (2) கீழ்மடுச்சேனை பாதை | புத்தளம் | 30,000 |

2. அரசாங்க அலுவலகங்களில் மேலே கூறப்பட்டிருக்கும் தொகை ரூபாவுக்கும் அல்லது அதற்கு மேலும் பதிவுசெய்யப்பட்ட கொந்த ராத்துக்காரர்களும், கூட்டுறவுச் சங்கங்களும், தொழிற் சங்கங்களுக்கும், கிராம முன்னேற்றச் சங்கங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கான வெற்றுப் பத்திரங்கள் 73.08.01 ந் திகதி மு. ப. 10.00 மணிவரை புத்தளம் கச்சேரியில் விநியோகிக்கப்படும்.

3. கொந்தராத்துக்காரர்கள், மேற்கூறிய வேலைகளுக்குக் கேள்விப் பத்திர வைப்புப்பணமாக ரூபா 50 வீதம், புத்தளம் கச்சேரியிலோ, வேறெந்தக் கச்சேரியிலோ அல்லது பொதுத் திறைசேரியிலோ பணத் தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன், மேலே கூறப்பட்ட ரூபா அல்லது அதற்கு மேலான தொகைக்குப் பதிவுசெய்யப்பட்ட கொந்த ராத்துக்காரர் என அத்தாட்சிப்படுத்தும் பத்திரங்களை, கேள்விப்பத் திரங்களுக்கான வெற்றுப்பத்திரங்கள் கொடுபடமுன், புத்தள அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விப்பத்திர வைப்புப்பணம் கட்டத் தேவையில்லை. எப்படியென்றாலும் மேலே கூறப்பட்ட ரூபாவுக்குப் பதிவு செய்யப்பட்ட பத்திரங்களைச் சமர்பித்த பின்னரே கேள்விப் பத்திரங்கள் இவர்களுக்கு வழங்கப்படும். காசோலைகள் தபாற்கட்டளைகள், காசுக்கட்டளைகள் ஆகியன ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

4. புத்தளம் அரசாங்க அதிபரிடம் இருந்து பெறும் பத்திரங்கள் இணைப்பிரதியில் நிரப்பப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்களில் கையொப்பமிட்டு, திகதியிட்டு, முத்திரையிடப்பட்ட கவரில் போட்டு அக்கவரின் இடது பக்க மேல் மூலையில் “ .................... கட்டு வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் ” எனக் குறிப்பிடவேண்டும். கேள்விப் பத்திரங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படாவிட்டால், கேள்விப் பத்திரங்களைத் தாமாகவே கொழும்புத் திறைசேரி, மூன்றாவது தட்டிலுள்ள 320 ஆம் இலக்க அறையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பத்திரப் பெட்டியில் இடவேண்டும்.

5. கேள்விப்பத்திரங்கள் 1973 ஆண்டு ஆவணி மாதம் 6 ந் திகதி முற்பகல் 10.00 மணிக்கு மேலே குறிக்கப்பட்ட இல. 320 ம் அறையில் திறக்கப்படும் பொழுது கேள்விக்காரர்களோ அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளோ சமூகமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

6. காரணம் காட்டாமல் கேள்விப்பத்திரங்களில், ஏதாவதொன் றையோ அதன் பகுதியொன்றையோ ஏற்றுக்கொள்ளவும், கேள்விப் பத்திரங்களில், ஏதாவதொன்று அல்லது முழுவதையும் நிராகரிக்க கேள்விப்பத்திரச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

7. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரக்காரர், தமது கேள்விப்பத் திரம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டவுடன் கேள்விக்குரிய தொகை ரூபாவின் நூற்றுக்கு ஐந்து வீதத் தொகையை பாதுகாப்புப் பணமாகக் கட்ட வேண்டும். அத்துடன் ஏழு நாட்களுள் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுதல் வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரக்காரருக்கு அவர் கொடுத்த விலா சத்திற்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ, தெரிந்தெடுக்கப் பட்டதை கடித மூலம் அறிவித்தால், கேள்விப்பத்திரக்காரர் ஏற்றுக் கொண்டார் என்று கொள்ளப்படும். கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப் பட்டது பற்றி கடிதம் பெற்ற ஒருவர், ஒப்பந்தம் எழுதத் தவறுவா ராயின் அவர் கட்டிய கேள்விப்பத்திர வைப்புப்பணம் அரசாங்கத்துக்குச் சொந்தமாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரக்காரர், கேள்விப் பத்திரத் தொகையின் நூற்றில் ஐந்து பங்கைக் கட்டியவுடன், தேர்ந் தெடுக்கப்படாதோரின் கேள்விப்பத்திர வைப்புப்பணம் திருப்பிக் கொடுக் கப்படும்.

8. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் நியமித்த வேலையை முடிப்பதற்கு இலங்கையரையே வேலைக்கமர்த்தல் வேண்டும். அதுவும் வேலை ஏற்றுக்கொள்ளப்பட்ட பகுதியில் சீவிப்பவரையே தேர்ந்தெடுத் தல் வேண்டும். கூலியாட்களுக்குச் சம்பளம் வழங்குவதற்கென இப் பொழுது பாவிப்பில் உள்ள சட்டங்கள், பின்னும் பாவிப்பிற்கு வரவிருக் கும் சட்டங்களுக்கு இணங்கவே, இவ்வேலையை முடிப்பதற்குத் தாமான வேதனம் வழங்க வேண்டும்.

9. வேறு விபரங்கள் புத்தள அரசாங்க அதிபரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பீ. எஸ். விஜயவீர,
அரசாங்க அதிபர்,
புத்தளம் மாவட்டம்.

7–252/2—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

## பொருட்கள் விற்பனையும் பிறவும்

### காட்டுத் திணைக்களம்

ஏலவிற்பனை

அம்பாறை மாவட்டத்தில் பறிமுதல் செய்யப்பட்ட பல இனங் களைக்கொண்ட மரங்களும், காத்தைகளும் மட்டக்களப்பு மாவட்ட வன பரிபாலன அதிகாரியால் 30.07.73 காலை 10 மணிக்கு அம்பாறை மாவட்ட வன அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

கேட்க விரும்புவோர் ஏல விற்பனைக்கு முன்பதாகவே மரங்களை யும், காத்தைகளையும் பார்வையிடும்படி கோரப்படுகின்றனர்.

ஏல விற்பனை பற்றிய முழு விபரங்களும் கீழ் கையொப்பமிட்ட வரிடமோ அல்லது மேற்கூறிய அம்பாறை மாவட்ட விசேஷ வன பாலகர் காரியாலயத்திலோ பெற்றுக்கொள்ளலாம்.

டபிள்யு. ஜே. ஜே. மேதர்,
மாவட்ட வன பரிபாலன அதிகாரி, கி.பி.,
மட்டக்களப்பு.

மட்டக்களப்பு,
23.6.73.

7–414—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

## பொலீஸ் டிப்பாட்மெண்ட்

குளியாப்பிட்டி உதவி பொலீஸ் அதிகாரி காரியாலயத்தில் 28.7.73 ந் திகதி காலை 9.00 மணிக்கு கீழ்காணும் பொருட்கள் ஏலத்தில் விடப்படும் :—

| இல. | பொருட்களின் விபரம் | | | அளவு |
|---|---|---|---|---|
| 1. | டீ. எச். 79700 | .. | (60/41) ரெலே சைக்கிள் | .. 1 |
| 2. | டீ. சி. 2674 | .. | (423/56) " | .. 1 |
| 3. | சி. பி. 535 | .. | (166/54) " | .. 1 |
| 4. | சி. பி. 531 | .. | (115/54) " | .. 1 |
| 5. | டீ. சி. 2682 | .. | (425/56) " | .. 1 |
| 6. | சி. ஜே. 98466 | .. | (77/55) " | .. 1 |
| 7. | டீ. சி. 2788 | .. | (423/56) மொனரா | .. 1 |
| 8. | டீ. சி. 2781 | .. | (430/56) ரெலே | .. 1 |
| 9. | பீ. கே. 137 | .. | (186/62) மொனரா | .. 1 |
| 10. | டீ. கே. 91040 | .. | (55/59) ரெலே | .. 1 |
| 11. | டீ. சி. 2687 | .. | (427/56) " .. | .. 1 |
| 12. | டீ. சி. 2677 | .. | (426/56) " .. | .. 1 |
| 13. | பீ. கே. 478 | .. | (182/62) மொனரா | .. 1 |
| 14. | பீ. கே. 200 | .. | (252/62) " .. | .. 1 |
| 15. | ஏ. சி. 414 | .. | (32/61) " .. | .. 1 |
| 16. | டீ. கே. 261 | .. | (242/62) " .. | .. 1 |
| 17. | ஏ. சி. 10 | .. | (25/61) " .. | .. 1 |
| 18. | டீ. எம். 79701 | .. | (60/40) ரெலே | .. 1 |
| 19. | 4 கலன் கொள்ளும் காலி டின் | | .. | .. 52 |
| 20. | 1 கலன் கொள்ளும் காலி டின் | | .. | .. 42 |
| 21. | 5 கலன் கொள்ளும் காலி டின் | | .. | .. 2 |

மேற்காணும் பொருட்களை 27.7.73 ந் திகதி காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை உதவி பொலீஸ் அதிகாரி காரியாலயத்தில் பார்வையிடலாம்.

சி. அம்பிகாபதி,
உதவி பொலீஸ் அதிகாரி,
குளியாப்பிட்டி.

குளியாப்பிட்டி பொலீஸ் காரியாலயம்,
1973 ம் ஆண்டு ஜூன் மீ 20 ந் உ.

7–280—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

# ஏல விற்பனைகள்

### ஏலவிற்பனை

*(தேசிய வீடமைப்பு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் விற்பனை)*

*பெரியகுடியிருப்பு, கல்பிட்டியவில் வசிக்கும் திரு. எம். என். எம். தி. என். மரிக்கார் அவர்களிடமிருந்து பிரசித்த நொத்தாரிசு திரு. அ. சங்கரப்பிள்ளை அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1960 மார்ச்சு மாதம் 26 ம் தேதிய 8679 ம் இல. ஈட்டுமுறியின் பேரில் 26.7.1969 ம் தேதியிலிருந்து ஆண்டொன்றுக்கு 3¾% வட்டியோடு ரூபா 9200/00 க்கு மேலதிக வட்டியோடும் விற்பனைத் தேதிவரை அல்லது அத்தகைய மீளப்பெறுகைக்காக என்னால் ஏற்பட்ட செலவுகளோடும், 26.7.1969 ம் தேதியிலிருந்து விற்பனைத் தேதிவரை குறித்த ஈட்டுமுறியின் நியதிகளின் கீழ்ச் சேர்க்கப்பட்ட எல்லாக் குற்றப்பணங்களோடும் முழுக்கொடுப்பனவுத் தேதிவரை 19.6.69 ம் தேதிக்குப் பின்னர் கொடுபட்ட பணங்களைக் கழித்து பதினையாயிரத்து ஐந்நூற்று நாற்பத்திரண்டு ரூபா என்பத்தைந்து சதத்தை (ரூபா 15,542.85) மீளப்பெறுவதற்காக தேசிய வீடமைப்பு உதவி ஆணையாளர் திரு. ரொஜீஸ் சுந்தரம் கோகேந்திரா அவர்களால் வழங்கப்பட்ட 2.3.72 ம் தேதிய விற்பனை செய்வதற்கு கட்டளையின் கீழும் அதன் பிரகாரமும், நான் அதே இடத்தில் வைத்து 1973 ஆகஸ்ட் மாதம் 4 ம் தேதி சனிக்கிழமை பி. ப. 3.30 மணியளவில் கீழ்க்காணப்படும் ஆதனத்தை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன்.*

*மேலதிக விபரங்களை கொழும்பு 2, சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையிலுள்ள தேசிய வீடமைப்பு ஆணையாளரிடமிருந்தோ அல்லது என்னிடமிருந்தோ பெற்றுக் கொள்ளலாம்.*

### அட்டவணை

*வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், கல்பிட்டிய, கல்பிட்டிய பிரிவு, கல்பிட்டிய பட்டணம், பெரிய குடியிருப்பில் அமைந்துள்ளதும் 37 பேர்ச்சர்கள் விஸ்தீரணம் கொண்டதும் உத்தரவு பெற்ற நில அளவையாளரான திரு. சி. எஸ். வீரவல அவர்களால் தயாரிக்கப்பட்ட 1958 அக்டோபர் 1 ம் தேதிய 326 ம் இல. வரைப்படத்தில் 1 ம், 2 ம் கூறுகளாகக் குறிக்கப்பட்டதும், தற்பொழுது திரு. என். நாகூர் பிச்செயினதும், திரு. எம். ஹமீத் மொஹமதோவினதும் காணிகளைக் கிழக்கெல்லையாகவும், திரு. ஏ. மிஸ்கின் பிச்செயினதும், என். நாகூர் பிச்சேயினதும், கே. பட்டினியினதும் காணிகளை வடக்கெல்லையாகவும் ரோட்டுக்களைத் தெற்கெல்லையாகவும், மேற்கெல்லையாகவும் கொண்டதும், அதன்கண் அமைக்கப்பட்ட வீட்டுடன் இரண்டும் ஒரு ஆதனமாகவுள்ள 4 ம், 6 ம் வரிமதிப்பு இலக்கங்களைக் கொண்ட "கதிரும்மா காணி" "தைத்தடிக் காணி" என்றழைக்கப்படுகின்ற காணிகளின் இரண்டு அருகிலிருக்கும் பகுதிகள் முழுமையும்.*

*சி. விக்கிரமசிங்க,*
*உத்தரவுபெற்ற ஏலவிற்பனையாளர்,*
*விலைமதிப்பாளர், தரகர்.*

*100 ம் இல. பிரதான வீதி,*
*புத்தளம்,*
*1973 யூன் 12.,*

–370—03.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

# நானாவித அறிவித்தல்கள்

### அடையாளச் சின்னம்—லக்சல

தனது சிறப்பியல்புகளைப் பிரதிபலிக்கக் கூடியதான உகந்த அடையாளச் சின்னமொன்றை உபயோகிப்பதில் லக்சல ஆர்வங் கொண்டுள்ளது. அவ்வடையாளச் சின்னம் பட வடிவமாகவோ சொல் வடிவாகவோ அன்றி இரண்டும் இணைந்ததாகவோ இருத்தல் வேண்டும்.

சித்தியடையும் கலைஞருக்கு ரூபா 250/- பரிசாக வழங்கப்படும்.

எல்லா வரைபடங்களும் பதிவுத் தபாலில் 1973 ஆவணி 8 ம் தேதியன்றோ அதன் முன்போ கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

சிறு கைத்தொழிற் பணிப்பாளரின் தீர்ப்பே முடிவானதென்பதுடன் கடிதத் தொடர்புகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

சிறு கைத்தொழிற் பணிப்பாளர்,
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு-1.

7–392—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக, வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப் படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் ஏதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| யூலை | 6.7.73 | வெள்ளி | 27.6.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 13.7.73 | வெள்ளி | 4.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 20.7.73 | வெள்ளி | 11.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 27.7.73 | வெள்ளி | 18.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| ஓகத்து | 3.8.73 | வெள்ளி | 25.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 10.8.73 | வெள்ளி | 1.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 17.8.73 | வெள்ளி | 8.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 24.8.73 | வெள்ளி | 15.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 31.8.73 | வெள்ளி | 22.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| செத்தெம்பர் | 7.9.73 | வெள்ளி | 29.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி | 5.9.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி | 11.9.73 | செவ்வாய் | ந.ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி | 19.9.73 | புதன் | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
**1972** ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.